18.06.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.50



புதுடில்லி: நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, குவிண்டாலுக்கு, 1,410 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.இதுகுறித்து, அரசு அதிகாரிகள், டில்லியில் நேற்று கூறியதாவது:பொருளாதார விவகாரங்களுக்கான, மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில், இந்தாண்டில், நெல்லுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை, 50 ரூபாய் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஒரு குவிண்டால் (100 கிலோ) நெல்லுக்கு, 1,410 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாய பொருள் செலவு மற்றும் விலை கமிஷன் அளித்த பரிந்துரைப்படி, குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அரசு அதிகாரிகள் கூறினர். கோடை காலத்தில் பயிரிடப்படும் முக்கிய தானியமாக, நெல் விளங்குகிறது. விவசாயிகளிடமிருந்து, குறைந்தபட்ச

ஆதரவு விலை அடிப்படையில், உணவு தானியங்கள் வாங்கப்படுகின்றன. ஜூலை 2014 முதல் ஜூன், 2015ம் ஆண்டு வரையிலான, பயிர் ஆண்டில் 10.25 கோடி டன் நெல் உற்பத்தியாகும் என, எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள், நெல் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண் துறை கட்டடங்கள் திறப்பு

.சென்னை: தமிழகம் முழுவதும், வேளாண் துறை சார்பில், 68.68 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட கட்டடங்களை, முதல்வர் ஜெயலலிதா, 'வீடியோ கான்பரன்ஸ்' மூலம் திறந்து வைத்தார்.வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்காக, ஆறு இடங்களில், 7.20 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, ஆறு நவீன சேமிப்புக் கிடங்குகள்; ஒன்பது மாவட்டங்களில், 19.79 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, 17 குளிர்பதன கிடங்குகள்; 10 இடங்களில், 3.60 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, தரம் மதிப்பிடுதல் மற்றும் பிரித்தல் கட்டடங்கள் ஆகியவற்றை, முதல்வர் திறந்து வைத்தார்.

அத்துடன், நான்கு அக்மார்க் ஆய்வகக் கூடங்கள், இரண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ஆறு பரிவர்த்தனை கூடங்கள், ஒன்பது கிராமிய சந்தைகளுக்கான, தரம் பிரித்தல் கூடங்கள், மூன்று வணிக கடைகள், இரண்டு உணவு பதப்படுத்துதல் மற்றும் பயிற்சிக் கூடங்கள், ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.நீலகிரி மாவட்டம், தொட்டப்பெட்டாவில், 80 லட்சம் ரூபாயில் ஏற்படுத்தப்பட்டுள்ள, தேயிலை பூங்கா; தேவாலாவில், 20 லட்சம் ரூபாயில் ஏற்படுத்தப்பட்டுள்ள, வண்ணத்துப் பூச்சி பூங்கா; ராமநாதபுரம் மாவட்டம், அச்சடிப்பிரம்பில், 7.29 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டுள்ள, மரபணு பூங்கா ஆகியவையும் திறக்கப்பட்டன.

புதுக்கோட்டையில், தோட்டக்கலை தகவல் பயிற்சி மையம், சத்தியமங்கலத்தில் உழவர் மையம், குடுமியான் மலையில் நுண்ணூட்டக் கலவை சேமிப்புக் கிடங்கு, சேலத்தில், உரம் கட்டுப்பாட்டு ஆய்வகம், ஆறு இடங்களில், மாநில பூச்சிக் கொல்லி மருந்து ஆய்வகம் ஆகியவையும் திறக்கப்பட்டன. அலுவலகங்களுக்கு ஜீப்: தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை கீழ் இயங்கும், மாவட்ட அளவிலான துணை இயக்குனர்கள், அலுவலக பயன்பாட்டிற்காக, 1.83 கோடி ரூபாயில், 29 ஜீப்கள் வாங்கப்பட்டு உள்ளன.அவற்றை வழங்குவதற்கு அடையாளமாக, இரண்டு ஓட்டுனர்களுக்கு, வாகனத்திற்கான சாவியை, முதல்வர் ஜெயலலிதா, தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.

### இன்னும் ஒரு வாரத்திற்குகிருஷ்ணா நீர் வரும்

ஊத்துக்கோட்டை: கண்டலேறு அணையில் தண்ணீர் இருப்பு குறைந்து வருவதால், சாய்கங்கை கால்வாய் வழியாக தமிழகத்திற்கு வரும் கிருஷ்ணா நீரின் அளவு குறைந்தது. இருப்பினும், தண்ணீர் திறப்பது நிறுத்தப்படாததால், இன்னும் ஒரு வாரத்திற்கு தண்ணீர் வரும் என, தமிழக அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.சென்னை மக்களின் தாகத்தை தணிக்கும் பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம், 'கிடுகிடு' வென குறைந்தது. இதனால், குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க, கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்திற்கு கிருஷ்ணா நீரை திறந்துவிடுமாறு, தமிழக அரசு கோரிக்கை விடுத்தது.

இதையடுத்து, கடந்த 1ம் தேதி, கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு, 1,000 கன அடி வீதம் கிருஷ்ணா நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சாய்கங்கை கால்வாய் வழியாக, 152 கி.மீ., பயணித்து, கடந்த, 4ம் தேதி, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயின்டை கிருஷ்ணா நீர் அடைந்தது. அது, மறுநாள், 25 கி.மீ., துாரமுள்ள பூண்டி நீர்த்தேக்கத்தை அடைந்தது.கடந்த, 10 நாட்களாக, வினாடிக்கு, 170 முதல் 210 கன அடி வரை, தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் வந்து கொண்டு இருந்தது.இந்நிலையில், கடந்த, 14ம் தேதி காலை, 6:00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 162 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர், நேற்று மாலை, 3:00 மணி நிலவரப்படி வினாடிக்கு, 90 கன அடியாக குறைந்தது.இதுகுறித்து, தமிழக பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கண்டலேறு அணையில் நீர்மட்டம் குறைந்துள்ளதால், தமிழகத்திற்கு வரும் நீரின் அளவும் குறைந்துள்ளது. அடுத்த, 10 நாட்களுக்கு தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் வரும் என, எதிர்பார்க்கிறோம்' என்றார்.

**குறைந்த தண்ணீரில் குச்சி கிழங்கு சாகுபடி**

அவலூர்பேட்டை:அவலூர்பேட்டை பகுதியில் குறைந்தளவு தண்ணீரில் குச்சி கிழங்கு பயிரிட்டுள்ளனர்.

மேல்மலையனுார் ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களிலுள்ள விவசாயிகள் குச்சிகிழங்கு பயிரிடுவதில்லை. அவலூர்பேட்டையில் புதுப்பூண்டி தாங்கல் பகுதியில் குச்சி கிழங்கினை விவசாயி ஒருவர் 3 ஏக்கர் பரப்பில் பயிரிட்டுள்ளார்.

தாய்லாந்து மரவள்ளி கிழங்கு வகையை சேர்ந்த இதன் விதை குச்சிகளை சேலத்திலிருந்து வாங்கி வந்துள்ளார்.நட்ட எட்டாவது மாதம், பத்தாவது மாதம் என வகைக்கேற்றபடி அறுவடை செய்யலாம். டன் ஒன்றுக்கு 5 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை சீசனுக்கேற்றபடி விலை போகிறது.

ஒரு ஏக்கருக்கு 25 முதல் 35 டன் வரை சாகுபடி செய்யலாம். அறுவடைநேரத்தில் சேலத்தை சேர்ந்த வியாபாரிகள் நேரிடையாக நிலத்திலேயே விலை பேசி ரொக்கப் பணத்தை விவசாயிகளுக்கு வழங்குகின்றனர்.

இந்த பயிருக்கு பேக்டம்பாஸ், டிஏபி உள்ளிட்ட உரங்களை இடுகின்றனர். மாதத்திற்கு இரண்டு முறை நீர் பாய்ச்ச வேண்டும். களை எடுத்து, பக்க கிளைகளை கிள்ள வேண்டும். குச்சி கிழங்கு சாகுபடி செய்துள்ள நிலப்பகுதியில் மழை நீர் தேங்கக்கூடாது.

இதை மானாவரி பயிராகவும் வைக்கலாம். கந்தக பூமியில் மட்டும் தண்ணீர் வசதி இருந்தால் மட்டுமே பயிரிட முடியும்.

கொல்லை மேடு உள்ளிட்ட பகுதிகளில் <உள்ள விவசாயிகள் தகுந்த ஆலோசனையுடன், இது போன்ற மாற்று பயிர் வைப்பதற்கு முன்வந்தால் அதிக வருவாய் ஈட்டலாம்.

**மாவட்ட வேளாண் துறை துணை இயக்குநர் ஆய்வு**

உளுந்தூர்பேட்டை:தேசிய உணவு பாதுகாப்பு திட்ட பணிகளை, மாவட்ட வேளாண் துணை இயக்குநர் இளவரசன் நேரில் ஆய்வு செய்தார்.உளுந்தூர்பேட்டை வட்டார வேளாண்மை துறை சார்பில், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அஜீஸ்நகர், பிடாகம், எறையூர் பகுதிகளில் ரொட்டவாட்டர் மற்றும் நீர் பாசன பைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.அதே போல் அஜீஸ்நகர் நாகேந்திரன் வயல்வெளியில் சூரிய ஒளி சக்தி மூலம் இயங்கும் மின் மோட்டார் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மாவட்ட வேளாண் துணை இயக்குநர் மத்திய திட்டம்(பொறுப்பு) இளவரசன் நேரில் பார்வையிட்டார்.

வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி, வேளாண் அலுவலர் கோவிந்தராஜ், வேளாண் அலுவலர் அந்தோணிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**பயிர்கள் சேதம் விவசாயிகளுக்கு ரூ.47,500 இழப்பீடு**

நாமக்கல்:காட்டுப்பன்றிகளால் பயிர்கள் சேதம் ஏற்பட்ட விவசாயிகளுக்கு, 47 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.நாமக்கல் அடுத்த, நாமகிரிப்பேட்டை பசலிமலை காப்புகாட்டை ஒட்டி உள்ள விவசாய நிலங்களில், மரவள்ளி கிழங்கு மற்றும் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. அந்த பயிர்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்தியதால், விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அதனால், பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என, கோரிக்கை விடுத்தனர். அதை தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட வனத்துறை சார்பில், காட்டுப்பன்றிகளால் பயிர்கள் சேதம் அடைந்த வெள்ளக்கல்பட்டியை சேர்ந்த, விவசாயிகள், 14 பேருக்கு, 47 ஆயிரத்து, 500 ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.அதற்கான காசோலையை, மாவட்ட வன அலுவலர் குணசேகரன் வழங்கினார். வனச்சரகர்கள் கனகரத்தினம், முருகேசன், வனத்துறை அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கல் வேளாண் துணை இயக்குனர் அறிக்கை**

கிருஷ்ணகிரி:"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்த உழவர் பெருவிழா மூலம், 46 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில், இடுபொருள் வழங்கப்பட்டது' என, வேளாண் துணை இயக்குனர் சடகோபன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:

உழவர் பெருவிழாக்களில், பங்கேற்ற விவசாயிகளுக்கு, 48 கோடி ரூபாய் மதிப்பிலான இடுபொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நுண் நீர் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியம், பிற விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியம், ஒரு ஏக்கர் என்ற உச்சவரம்பில்லாமல், 1 லட்சத்து, 33 ஆயிரம் விவசாயிகளுக்கு, 725 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.வேளாண் இயந்திரமாக்குதல் திட்டத்தில், விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 68 ஆயிரத்து, 206 வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் வாங்க, 195 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட பாசனப் பகுதிகளில், 181 கோடி ரூபாய் செலவில், 71 ஆயிரத்து, 561 ஹெக்டர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையின் மூலம், விதைப் பொருட்கள் திட்டத்தில், 941 மெட்ரிக் டன் சிறு தானிய சான்று விதைகள், 844 மெட்ரிக் டன் பயறு வகைப் பயிர்கள், சான்று விதைகள், 408 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து பயிர்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.மொத்தமாக, 51 ஆயிரத்து, 890 விவசாயிகளுக்கு, மூன்று கோடியே, ஒன்பது லட்சத்து, 45 ஆயிரம் ரூபாய் மானியத்தில் விதை கிராமத் திட்டத்தில், 50 சதவீதம் மானிய விலையில் நெல், சிறுதானியம், பயறுவகை பயிர்களின் சான்று விதைகள் என, 1,067 மெட்ரிக் டன் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், 26 கோடியே, எட்டு லட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் செலவில், திருத்திய நெல்சாகுபடி முறை, பயறு வகைகள், தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லிய பண்ணையம் ஆகிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

உழவர் பெருவிழா மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 42 லட்சத்து, 800 ரூபாய் மதிப்பீட்டில், 46 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் இடுபொருள் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு, தெரிவித்துள்ளார்.

## மாசிபட்ட பருத்தி ஏலம் அந்தியூரில் 22ல் துவக்கம்

அந்தியூர்:அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 22ம் தேதி முதல் மாசி பட்ட பருத்தி ஏல விற்பனை நடக்க உள்ளது.

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் வெளியிட்டுள்ள அறிக்கை:அந்தியூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வரும், 22ம் தேதி துவங்கி பிரதி திங்கள் தோறும் மாசி பட்ட பருத்தி, ஏல விற்பனை நடக்க உள்ளது.ஏல விற்பனையில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட மொத்த வியாபாரிகள், அறவை ஆலை மற்றும் நூற்பாலை உரிமையாளர்கள் பங்கேற்று கொள்முதல் செய்ய உள்ளனர்.விவசாயிகள், நன்கு முதிர்ந்து மலர்ந்து வெடித்த பருத்தியை அதிகாலையில் பறித்து, நிழலில் உலர்த்தி, தூசு மற்றும் சருகுகளை நீக்கி ரகம் வாரியாக தனித்தனியாக பிரித்து, விற்பனை கூடத்தில் நடக்கும் ஏல விற்பனைக் கொண்டு வர வேண்டும்.இதன் மூலம், தங்கள் விளை பொருளை சரியான எடை, போட்டி விலை, உடனடி பணத்துக்கு எவ்வித பிடித்தமும் இன்றி, நல்ல விலைக்கு விற்று பயன் பெற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த யோசனை

முசிறி:முசிறி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் புழு தாக்குதல் அதிகரித்துள்ளதால, அதனை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

முசிறி, உமையாள்புரம், செவந்தலிங்கபுரம், வெள்ளூர், அய்யம்பாளையம், ஏவூர், ஆமூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் காவிரி பாசன விவசாயிகள், குறுவை நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, இளம் பயிரில் பச்சை புழுக்களும், இலை சுருட்டு புழுக்களும் பயிரை பாதிப்புக்கு உள்ளாக்கி வருகிறது.

நெற்பயிர்களை பச்சைப்புழு, இலை சுருட்டு புழுக்களில் இருந்து காப்பாற்ற கிளோரிக் பைபாஸ், மோனோகுரோட்டோபாஸ், குளோரோ பைபாஸ், 20 இ.சி., இவற்றில் ஏதாவது ஒன்றை, ஏக்கர் ஒன்றுக்கு, 500 மி.லி., தெளித்து, பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்ற வேண்டும். மேலும், முசிறி யூனியன் கிடங்கில் விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம், நெல் உயிர்சத்து, உயிர் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை விவசாயிகள் பயன்படுத்தி பயன் பெறலாம்.

**விவசாயிகளுக்கு மண்மாதிரி அட்டை வேளாண்துறை முடிவு**

திருப்புவனம்:திருப்புவனம் வட்டாரத்தில் 47 வருவாய் கிராமங்களில் மூன்று கட்டமாக ஆயிரத்து 772 மண்மாதிரிகள் எடுக்கப்பட உள்ளன. திருப்புவனம் வட்டாரத்தின் மொத்த சாகுபடி பரப்பான 7,222 எக்டேரில் நன்செய் நிலங்களில் 2.5 எக்டேருக்கு ஒரு இடமும் புன்செய் நிலங்களுக்கு 10 எக்டேருக்கு ஒரு இடமும் தேர்வு செய்யப்பட்டு மண் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. இதன்மூலம் மண்ணின் வகைகள் பரிசோதனை செய்து வகைக்கு ஏற்ப உரங்கள், விவசாயங்கள் செய்ய முடியும். இதன்மூலம் நிலத்திற்கு ஏற்ற பயிர் சாகுபடி செய்து லாபம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல்கட்ட மண்மாதிரி 14 கிராமங்களில் இம்மாத இறுதிக்குள் எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

வேளாண்மை உதவி இயக்குநர் சுரேஷ்பாபு கூறும்போது: மண்மாதிரி எடுக்க வரும் விவசாய அலுவலர்களுக்கு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும். விவசாயிகள் தனித்தனியாக மண்மாதிரி எடுத்து பரிசோதனை செய்யவேண்டியதில்லை. வேளாண்துறை சார்பில் இலவசமாக மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் தனிதனி அடையாள அட்டை வழங்கப்பட்டு அதில் மண்ணின் தன்மை உள்ளிட்டவைகள் ஜி.பி.எஸ்., கருவி மூலம் பதிவு செய்து தரப்படும், என்றார்.

## மானியத்தில் காய்கறி, மலர் சாகுபடி நாற்று வழங்க ரூ.2.64 கோடி ஒதுக்கீடு

சிவகங்கை:""காய்கறி, மலர் சாகுபடி நாற்று, பழ மரக்கன்றுகளை மானியத்தில் வழங்க அரசு ரூ.2.64 கோடி ஒதுக்கியுள்ளது," என சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) கல்யாண சுந்தரம் தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் பழமரக்கன்றுகள், காய்கறி மற்றும் மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் வீரிய ஒட்டு ரக காய்கறி நாற்றுகள் மற்றும் உயர்ரக பழமரக்கன்றுகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இங்கு பழ மரங்கள், காய்கறி, மலர் சாகுபடி என 13 ஆயிரம் எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இதை அதிகரிக்கவும், அதிக விளைச்சலுக்கான தொழில்நுட்பத்தை விவசாயிகள் கடைபிடிக்க செய்யவும், இந்த ஆண்டு தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ.2.64 கோடி மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி மா ஒட்டு செடி, கொய்யா பதியன்கள், முந்திரி ஒட்டு செடி, பப்பாளி வீரிய ரக நாற்றுகள் விநியோகம் செய்யப்படும். மா புதிய நடவு முறையில் மா அடர் நடவு முறை மற்றும் மா உயர் அடர் நடவு முறையில் விவசாயிகளுக்கு பயன்தரும். மா ஒட்டு

செடிகள் அடர் நடவு முறையில் 100 எக்டேர், மா உயர் அடர் நடவு முறையில் 5 எக்டேர் பரப்பளவும் வினியோகம் செய்யப்படும். கொய்யா அடர் நடவு முறையில் 50 எக்டேரில் கொய்யா பதியன்கள் வினியோகம் செய்யப்படும். முந்திரி ஒட்டு செடிகள், பப்பாளி வீரிய ரக நாற்று, மல்லிகை நாற்றுகள் தலா 100 எக்டேருக்கு வினியோகம் செய்யப்படும். இது மட்டுமின்றி பசுமை குடில், நிழல் வலைக்கூடம், வெங்காயம் சேமிப்பு கிடங்கு, தேனீ எடுக்கும், வளர்ப்பு பெட்டி ஆகியவை மானியத்தில் வழங்கப்படும். அதிக விளைச்சல் தரும் வீரிய ரக காய்கறி விதைகளை தேர்வு செய்து, நவீன குழித்தட்டு நாற்றாங்கால் முறையில் நாற்றுகளை உற்பத்தி செய்து, மாவட்ட விவசாயிகளுக்கு அந்தந்த வட்டார தோட்டக்கலை அலுவலர் மூலம் வழங்கப்படும்.இதில், 58 எக்டேரில் கத்தரி நாற்று, 35 எக்டேரில் தக்காளி நாற்று, 227 எக்டேரில் மிளகாய் நாற்றுகள் மானியத்தில் வினியோகம் செய்யப்படும். இவற்றை பெற விவசாயிகள் வட்டார அளவில் உள்ள உதவி இயக்குனர் அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம், என்றார்.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி புதன்கிழமை கூறியதாவது:

தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன்

கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 91, 79 டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும். இரவில் மழை...: சென்னை மாநகரில், செவ்வாய்க்கிழமை மாலை முதல் புதன்கிழமை அதிகாலை வரை தியாகராய நகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு உள்ளிட்ட மாநகரின் ஒரு சில பகுதிகளில் சாரலுடன் கூடிய லேசான மழை பெய்தது.

## திருவள்ளூரில் திடீர் மழை



திருவள்ளூரில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் புதன்கிழமை காலை வரை பெய்த மழையால் வெப்பம் தணிந்தது. திருவள்ளூர் மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் முடிந்த பிறகும் கடுமையான வெயில் மக்களை வாட்டி வந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் தொடங்கிய மழை 2 மணி நேரம் நீடித்தது.

இதனால், நகரம் முழுவதும் பூமி குளிர்ந்து ஆங்காங்கே குளம் போல் தண்ணீர் தேங்கியது. பாதாளச் சாக்கடைப் பணிகள் முடிவடைந்த இடத்தில் சாலை சேறும் சகதியுமாக மாறியது. மழை பொழிந்து பூமி குளிர்ந்ததால் புதன்கிழமை காலை முதல் மாலை

வரை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மேலும் ஜில்லென்ற காற்று வீசியது. கடந்த ஒருவாரமாக கடுமையான வெப்பத்தால் அவதிப்பட்டு வந்த நகர மக்கள் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர்.

### வெள்ளரிப் பயிர்: 50 நாள்களில் அதிக லாபம்!



பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிரான வெள்ளரியைப் பயிரிட்டால், அடுத்த 50 நாள்களில் அறுவடை செய்து அதிக லாபம் பெற முடியும் என்று விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையினர் யோசனை தெரிவித்தனர். அனைவரும் அறிந்த, விரும்பி உண்ணும் காய்வகையில் ஒன்று வெள்ளரி. உடலுக்குக் குளுமை தரும் காய்களில் ஒன்றாகவும் வெள்ளரி திகழ்கிறது.

மண், தட்பவெட்ப நிலை: எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மையுடையது. ஆனால், அதிக மகசூல், சாகுபடி பெற வேண்டும் என்றால் களிமண் கூடிய இருமண் பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றதாகும். வெள்ளரி ஒரு வெப்ப மண்டலப் பயிராகும். குறைந்த வெப்ப நிலை கொண்ட பருவ சாகுபடிக்குச் சிறந்ததாகும்.

பருவம்: ஜூன்- செப்டம்பர் மாதங்களிலும், டிசம்பர்- மார்ச் மாதங்களிலும் சாகுபடி செய்யலாம். நிலம் தயாரித்தல்: நிலத்தை 3 அல்லது 4 முறை நன்றாக உழவு செய்ய வேண்டும். அதன் பின்பு 1.5

மீட்டர் இடைவெளியில், 45 செ.மீட்டர் ஆழம், அகல, நீளத்தில் குழிகளை வெட்ட வேண்டும். அதில் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்தை இட வேண்டும். தொழு உரத்துடன் 100 கிராம் கலப்பு உரமிட்டு மேல் மண் கலந்து நிரப்பி விதையை ஊன்ற வேண்டும்.

விதையளவு, நடவு: வெள்ளரி சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு 2 கிலோ விதை தேவைப்படும். விதை ஊன்றுவதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் மருந்து கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு குழிக்கு 4 முதல் 5 விதைகளை ஊன்ற வேண்டும்.

நீர் பாய்ச்சுதல்: விதை ஊன்றியவுடன் குடம் வைத்து தண்ணீர் ஊற்ற வேண்டும். பிறகு விதை முளைத்து செடி வளர்ந்தவுடன் வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும். செடி நன்றாக வளர்ந்தவுடன் வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.

பின் செய் நேர்த்தி: விதை முளைத்து வந்தவுடன் குழிக்கு மூன்று செடி விட்டு மற்ற செடிகளைப் பிடுங்கி விட வேண்டும். கொடி வளர்ந்தவுடன் குழியை 30 நாள்கள் இடைவெளியில் களை எடுத்து சுத்தம் செய்ய வேண்டும்.

எத்ரல் என்ற வளர்ச்சி ஊக்கியான 25 பிபிஎம் என்ற மருந்தை 10 லிட்டர் தண்ணீரில் 2.5 மில்லி கிராம் அளவில் கலந்து இரண்டாம் இலைப் பருவத்தில் முதல் முறையும், அதன் பிறகு 7 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். இதன் மூலம் பெண் பூக்களின் உற்பத்தியை அதிகப்படுத்தலாம். விதை ஊன்றி 30 நாள்கள் கழிந்த நிலையில் 50 கிராம் யூரியாவை மேலுரமாக இடலாம்.

பயிர் பாதுகாப்பு: பூசணி வண்டு, பழ ஈயின் தாக்குதல் இருக்கும். அப்படி இருக்கும் போது பூசணி வண்டைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் கார்பரைல் கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

பழ ஈயை கட்டுப்படுத்த மாலத்தியான் மருந்து ஒரு லிட்டர் தண்ணீரில் 2

மில்லி லிட்டர் கலந்து தெளிக்கலாம். மேலும் பழ ஈயை கருவாட்டுப் பொறி வைத்தும் கட்டுப்படுத்தலாம்.

அறுவடை, மகசூல்: மேற்கண்ட முறைகளை முழுமையாகக் கையாண்டால் விதை ஊன்றிய 50 நாளில் வெள்ளரிக் காய்கள் அறுவடைக்குத் தயாராக இருக்கும். அதன் பிறகு 8 முதல் 10 நாள்கள் இடைவெளியில் தொடர்ந்து அறுவடை செய்வதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 8-இல் இருந்து 10 டன் வெள்ளரிக் காய்கள் கிடைக்கும் எனத் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கரும்பில் நுண்ணூட்டக் கரைசல் தெளித்தலுக்கான வழிமுறை...**




கரும்பில் நுண்ணூட்டக் கரைசல் தெளித்தலுக்கான வழிமுறை குறித்து தண்டராம்பட்டு வேளாண் உதவி இயக்குநர் அ.பாலா அறிவுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டாரத்தில் ஒரு வருடத்தில் சராசரியாக 12,000 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு வருகின்றது. கரும்பு பயிரில் நடவுப் பயிரை விட மறுதாம்பு பயிரில் நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறையால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

மறுதாம்பில் இளம் கரும்பு பயிரில் இரும்புச் சத்துப் பற்றாக்குறையில் இலைகள் மஞ்சள் நிறமாகி நாளடைவில் கரும்பின் வளர்ச்சி

பாதிக்கப்படும். இதற்கு தாழைப் பூத்தல் என்று பெயர். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு பெரஸ் சல்பேட் 4 கிலோ, சிங்க் சல்பேட் 2 கிலோ 2 நுண்ணூட்டச்சத்தையும் முதள் நாள் இரவில் 10 லிட்டர் (1 குடம்) தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் 2 எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து நன்கு கலக்கி வடிகட்ட வேண்டும். அத்துடன் 4 கிலோ யூரியாவைச் சேர்த்து கலக்கி அந்தக் கரைசலைக் கைத்தெளிப்பான் கொண்டு 14 டேங்க் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். இதன்படி தெளித்தால் 10 நாள்களுக்குள் மஞ்சள் நிறம் மாறி துளிர்த்து வரும் இலைகள் பச்சை நிறமாக வளரும். ஒருமுறை தெளித்து மஞ்சள் நிறம் மாறவில்லை எனில் 15 நாள்கள் கழித்து மறுமுறையும் மேற்கண்டவாறு தெளிக்க வேண்டும். இதனால் பயிர்கள் நன்றாக வளர்ந்து, கரும்பு எடை கூடி மறுதாம்பு வயலிலும் அதிக மகசூல் பெற முடியும். எனவே கரும்பு விவசாயிகள் மேற்கண்ட தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெற்று பயன்பெறுமாறு உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ரூ.2 லட்சத்துக்கு விலை போகும் காங்கேயம் காளைகள்

ஒட்டன்சத்திரம் அருகே எஸ்.அத்திக்கோம்பையில் நடைபெற்று வரும் கால்நடைச் சந்தையில் ஒரு ஜோடி காங்கேயம் காளைகள் ரூ.2 லட்சம் வரை விற்பனையாகின. ஒட்டன்சத்திரம் அடுத்துள்ள எஸ்.அத்திக்கோம்பை ஸ்ரீ உச்சிமாகாளியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் கால்நடைச் சந்தை நடைபெறுவது வழக்கம். தற்போது 119-ஆவது ஆண்டு கால்நடைச் சந்தை செவ்வாய்க்கிழமை தொடங்கியது. வரும் 22-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கால்நடைச் சந்தையில் சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் மாடுகள், மற்றும் விலை

உயர்ந்த காங்கேயம் காளைகள், பல்வேறு இன கன்றுகள் விற்பனைக்கு வந்துள்ளன. இதைத்தொடர்ந்து தமிழகம் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்தும் ஏராளமான விவசாயிகள் சந்தையை பார்வையிட்டு மாடுகளை விலைக்கு வாங்கி செல்கின்றனர். சந்தையில் அதிக வரவேற்பை பெற்றுள்ள காங்கேயம் காளை மாடுகள் ஜோடி ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை விற்பனையாகின.

இந்நிலையில் ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் காளைகள் விற்பனை சரிந்துள்ள நிலையில், கேரளாவுக்கு அடிமாடுகளாக விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் ஆண்டுதோறும் மாடுகளின் வரத்து குறைந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்கும் நாள் கூட்டம் ஜூன் 19 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. இது குறித்து, ஆட்சியர் வே. ராஜாராமன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இக்கூட்டம், விருதுநகர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வளர்ச்சி மன்றக் கூட்டரங்கத்தில் நடைபெற உள்ளது. அதில், விவசாயம் தொடர்பான குறைபாடுகள் குறித்து, விவசாயிகள் மனுவாகவோ அல்லது நேரிலோ தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு பயனடையும்படி, ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**காய்கறிகளில் நச்சுத்தன்மை அதிகரிப்பு விவகாரம்: தாவரவழி பூச்சிக் கொல்லிகளையே பயன்படுத்த வேண்டும்**

காய்கறிகளில் நச்சுத்தன்மை அதிகளவில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில், கோவை மாவட்ட விவசாயிகள் தாவரவழி பூச்சிக் கொல்லி மருந்துகளையே பயன்படுத்த வேண்டும் என்று தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் விளையும் காய்கறிகளில் நச்சுத்தன்மை அதிகளவில் இருப்பதாக கேரள அரசு கூறியுள்ளது. இதையடுத்து, தமிழக காய்கறிகளை வாங்க கேரள வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில் விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்துகளை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்றும், தாவர வழி பூச்சிக் கொல்லிகளையே இயன்றவரை பயன்படுத்த வேண்டும் என்றும் தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) ஆ.ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

காய்கறிப் பயிர்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளின் எச்சங்களை ஆராய்தல் என்ற திட்டத்தின் கீழ் 2013-14 ஆம் ஆண்டில் தேசிய அளவில் ஆய்வு நடத்தப்பட்டது. இதில், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 16,790 காய்கறி மாதிரிகளில் 3 சதவீதம், அதாவது 509 காய்கறி, வாசனை திரவிய பயிர் மாதிரிகளில் பூச்சிக் கொல்லிகளின் எச்சம் அதிகளவில் இருப்பது தெரிய வந்துள்ளது.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறிப் பயிர்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளின் எச்சம் அதிகளவில் இருப்பது கவலை தரக் கூடியது. எனவே, கோவை மாவட்டத்தில் காய்கறி பயிரிடும் விவசாயிகள் ஆபத்தில்லாத பூச்சிக் கொல்லி மருந்துகளை அளவோடு பயன்படுத்த

வேண்டும். மேலும் இயன்ற வரையிலும் தாவர வழி பூச்சிக் கொல்லிகளையே பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், "கோவை மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் காய்கறிகளில் அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் கூடுதலாக பூச்சிக் கொல்லி மருந்தின் எச்சம் எதுவும் இல்லை.

இருப்பினும், இயற்கை வழி பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகள் மருந்து அடித்து ஒரு வாரம் கழித்தே காய்கறிகளை அறுவடை செய்ய வேண்டும் என்றார்'.

**நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூன் 19) நடைபெற உள்ளது.

இதுகுறித்து வருவாய் கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள் வெளியிட்ட செய்தி:உடுமலை வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளும் இந்த கூட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**உதகையில் பரவலாக மழை**

தென்மேற்கு பருவ மழையின் தொடக்கமாக, உதகை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பரவலாக தூறல் மழை பெய்து வருகிறது.

உதகை நகரில் கடந்த 2 நாள்களாக தூறல் மழை பெய்து வருகிறது. தொடர்ந்து, பலத்த காற்றும் வீசி வருவதால் ஒரு சில இடங்களில் மின்சாரமும், தொலைதொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

மழை மற்றும் காற்றின் காரணமாக கடும் குளிர் நிலவுவதால் உல்லன் பனியன்கள், தொப்பி விற்பனை சூடுபிடித்துள்ளது.

**சூரியகாந்தி பிண்ணாக்கை பரிசோதனை செய்து பயன்படுத்த அறிவுறுத்தல்**

சூரியகாந்தி பிண்ணாக்கை பூஞ்சான நச்சு பரிசோதனை செய்து பயன்படுத்த கோழிப்பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த 3 நாள்கள் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. தென்மேற்கு பருவமழை சற்று வலுப்பெற்று இருந்தாலும், அதன் தாக்கம் மற்ற தென் மாநிலங்களில் மட்டுமே காணப்படும். இருப்பினும், காற்றின் வேகம் சற்று உயர்ந்து காணப்படும். இதனால், இதுவரை காணப்பட்ட அதிகபட்ச கோடையின் தாக்கம் குறையும். காற்றின் வேகம் படிப்படியாக உயரும் என்பதால், இனிவரும் வாரங்களில் வெப்பம் மேலும் குறையும் வாய்ப்புள்ளது. சூரியகாந்தி பிண்ணாக்கில், அக்ரா நச்சின் தாக்கம் அதிகமாக உள்ளனவா என பூஞ்சான நச்சு பரிசோதனைக்கு உள்படுத்தி பயன்படுத்த வேண்டும்.

**ஜூன் 26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும் 26 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியரகத்தில் ஜூன் 26 ஆம் தேதி காலை 10 மணிக்கு

நடைபெறவுள்ளது. இதில், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாயசங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம்.

**ஜூன் 25 -ல் விவசாயிகள் குறைகேட்பு முகாம்**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு முகாம் ஜூன் 25-ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் தலைமையில் காலை 10 மணியளவில் விவசாயிகள் குறைகேட்பு முகாம் நடைபெற உள்ளது. இதில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இம்முகாமில் கலந்துகொண்டு விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

**புதுகையில் நீர்வள, நிலவளத் திட்டம்:உலக வங்கி ஆய்வுக் குழுவினர் ஆய்வு**

உலக வங்கி நிதி உதவியுடன் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள, நிலவளத் திட்டத்தை உலக வங்கியின் ஆய்வுக்குழு பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

திருவரங்குளத்தில் உள்ள வேளாண்மை வணிக வளாகம் மற்றும் விளைபொருள் சேமிப்புக் கிடங்கு நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள வேளாண்மைத் துறையின் தோப்புப்பட்டி, உளுந்து விதை உற்பத்தி சாகுபடி குழு உறுப்பினர்கள், வேளாண் வணிகத்துறைறையின் குப்புடையான்பட்டி, வெள0ளரி விளைபொருள் குழு உறுப்பினர்கள், இளஞ்சாவூர் பயறு வகை பயிர்கள் விளைபொருள்

குழு உறுப்பினர்கள், புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் சேமிக்கப்பட்டுள்ள சிறு தானியங்களை ஆய்வுகள் மேற்கொண்டு அவர்களது கருத்துகளை உலக வங்கி குழு பிரதிநிதிகள் கேட்டறிந்தனர்.

பெரியநாயகிபுரத்தில் உள்ள நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மக்காச்சோளம் ஈர்ப்புத் திடல்களை கள ஆய்வு மேற்கொண்டு, மக்காச்சோளம் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளின் சாகுபடி விவரம், மகசூல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து ஆய்வு செய்து விவரங்களை கேட்டறிந்தனர்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ரெ. சதானந்தம், நீர்வள, நிலவளத் திட்ட வேளாண்மை கூடுதல் இயக்குநர் (சென்னை) குணசேகரன், வேளாண்மை துணை இயக்குநர்கள் சாந்தி, (வேளாண் வணிகம்) முகம்மதுஅப்துல் நசீர், வேளாண்மை அலுவலர்கள் கிருஷ்ணமூர்த்தி, முகம்மது ரபி உள்ளிட்டோர் உடனிருருந்தனர்.

ஏற்பாடுகளை, திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அன்பரசன் குழுவினர் செய்திருந்தனர்.

### 1,330 இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனை

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,330 இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகேயுள்ள பழவந்தான்கட்டளை கிராமத்தில் நெல் பயிர் விளைச்சல், பயிர் அறுவடையை புள்ளியியல் துறை முதன்மைச் செயலரும், ஆணையருமான வெ. இறையன்பு புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து, மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்தது:

பயிர் விளைச்சல் மதிப்பீடு, பயிர் அறுவடை பரிசோதனை பொருளியல், புள்ளியியல் துறை, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்களைக் கொண்டு புள்ளியியல் கோட்பாட்டின்படி நடத்தப்படுகிறது.

இந்த ஆய்வு முடிவின்படி ஹெக்டேருக்கு 7 மெட்ரிக் டன் என்ற அளவில் மகசூல் கிடைத்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் தொகுக்கப்பட்டு அரசின் திட்டமிடல் பணிகளுக்கும், உணவு கொள்கைகளை வகுப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மாவட்டத்தில் ஓராண்டில் குறுவை, சம்பா, கோடை ஆகிய பருவ வாரியாகவும், பொது பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டம், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 1330 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

புள்ளியியல் துறை கடலூர் மண்டல இணை இயக்குநர் காமராஜ், வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## நெல்லுக்கு ஆதரவு விலை ரூ.50 உயர்வு மத்திய அரசு முடிவு



புதுடெல்லி,

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்தி இருக்கிறது.

நெல்லுக்கு ஆதரவு விலை ரூ.50 உயர்வு

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய மந்திரிசபை குழு கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்த கூட்டத்தில் இந்த 2015–2016–ம் ஆண்டில் கரீப் (சம்பா) பருவத்தில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்தி ரூ.1,410 ஆக நிர்ணயிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. வேளாண் விளைபொருட்கள் செலவினம் மற்றும் விலைகள் ஆணையம் நெல்லுக்கான ஆதார விலையை உயர்த்த மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து இருந்தது. அதை ஏற்று குறைந்தபட்ச ஆதரவு விலையை 50 ரூபாய் அதிகரிக்க மந்திரிசபை குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கேள்வரகு

கேள்வரகு விலை குவிண்டாலுக்கு ரூ.100 உயர்த்தப்பட்டு ரூ.1,650 ஆகவும், சோளத்தின் விலை ரூ.40 உயர்த்தப்பட்டு ரூ.1,590 ஆகவும், மக்காச்சோளத்தின் விலை ரூ.15 உயர்த்தப்பட்டு ரூ.1324 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

சூரியகாந்தி விதையின் விலை குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்தப்பட்டு ரூ.3,800 ஆகவும், நிலக்கடலையின் விலை ரூ.30 உயர்த்தப்பட்டு ரூ.3,650 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

பருப்பு வகைகள்

இதேபோல், துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு ஆகியவற்றுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு தலா ரூ.275 உயர்த்த

மந்திரிசபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்மூலம் இவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு தலா ரூ.4,625 ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

பாசிப்பருப்புக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டு ரூ.4,850 ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

ஊக்கத்தொகை

வேளாண் விளைபொருட்கள் செலவினம் மற்றும் விலைகள் ஆணையம் பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துமாறு வழங்கிய சிபாரிசை ஏற்றுக்கொண்டதோடு, அவற்றுக்கு ஊக்கத்தொகையாக குவிண்டாலுக்கு ரூ.200 வழங்கவும் மந்திரிசபை குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், அந்த மழை அதிக அளவில் பெறும் மாநிலங்களில் சம்பா பருவ விதைப்பு நடைபெற்று வருகிறது. எனவே நெல் மற்றும் பருப்பு வகைகளின் விலையை கட்டுப்படுத்தி, உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அவற்றின் கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தி இருக்கிறது.

மேற்கண்ட தகவல்களை மந்திரிசபை கூட்டம் முடிந்ததும் விவசாய மந்திரி ராதாமோகன் சிங் நிருபர்களிடம் தெரிவித்தார்.

4¾ லட்சம் ஹெக்டேர்

2014–2015–ம் ஆண்டு சம்பா பருவத்தில் சாதாரண ரக நெல் குவிண்டால் விலை ரூ.1,360 என்றும், முதல் ரக நெல் குவிண்டால் விலை ரூ.1,400 என்றும் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

கடந்த ஆண்டில் சம்பா பருவத்தில் இந்தியாவில் 4.52 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டதாகவும், இந்த ஆண்டில் 4.71 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டு இருப்பதாகவும் அரசு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2014–2015–ம் ஆண்டில் நெல் உற்பத்தி 10 கோடியே 25 லட்சத்து 40 ஆயிரம் டன் ஆகும். அதற்கு முந்தைய ஆண்டில் நெல் உற்பத்தி 10 கோடியே 66 லட்சத்து 50 ஆயிரம் டன்னாக இருந்தது.

## கட்டுபடியான விலை இல்லாததால் ரூ.20 கோடி மதிப்பிலான கோரைகள் தேக்கம்



கட்டுபடியான விலை இல்லாததால் ரூ.20 கோடி மதிப்பிலான கோரைகள் தேங்கி கிடக்கிறது.

கோரை பயிர்

கரூர் மாவட்டத்தில் நெரூர், வாங்கல், பஞ்சமாதேவி, திருமுக்கூடலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கோரை பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. கோரை பயிர்கள் 6 மாதத்திற்கு ஒரு முறை அறுவடை செய்யப்படும். அறுவடை செய்யப்படும் கோரைகள் அந்தந்த வயலில் எந்திரம் மூலம் இரண்டாக கிழித்து காய வைக்கப்படும். நன்கு காய்ந்த பிறகு கட்டு, கட்டாக கட்டி விற்கப்படும். கரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் கோரைகள் பல்வேறு மாவட்டங்களுக்கு தரகர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அதாவது விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையில் ஒரு கட்டு கோரை ரு.1,050-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக ஒரு கட்டு கோரை ரூ.700-க்கு விற்கப்பட்டது.

இதனால் கட்டுபடியான விலையில்லாமல், விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே கட்டுபடியான விலை கிடைக்கும் வரை கோரையை வியாபாரிகளுக்கு வழங்காமல், வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். தேங்கி கிடக்கிறது

இதனால் கரூர் மாவட்டம் முழுவதும் அறுவடை செய்து காய வைத்து விற்பனைக்கு தயாராக இருந்த கோரை கட்டுகள் ஆங்காங்கே வயலில் தேங்கி கிடக்கிறது. மேலும் வயலில் அறுவடை செய்த கோரைகளும் அப்படியே வயலில் காய வைத்தவாறு உள்ளது. அதன்படி சுமார் 20 கோடி மதிப்பிலான கோரைகள் விற்பனை ஆகாமல் தேங்கி கிடப்பதாக கூறப்படுகிறது.

போராட்டம்

இது குறித்து கரூர் மாவட்ட கோரை உற்பத்தி யாளர்கள் சங்க தலைவர் சின்னதுரையிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

கரூர் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கோரை பயிரிடப்பட்டு உள்ளது. இதில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டு உள்ளனர். கடந்த காலங்களில் ஒரு கட்டு கோரை ரூ.1,050-க்கு விற்பனை ஆகியது. சமீப காலமாக இடைத்தரகர்களால் கோரை விலை குறைந்து தற்போது ஒரு கட்டு ரூ.700-க்கு தான் விற்பனையாகிறது. ஒரு ஏக்கர் கோரை பயிரிட்டால் அறுவடை செய்வதற்குள் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை செலவு ஆகும். பின்னர் கோரை அறுக்கப்பட்டு கட்டுபடியான விலைக்கு விற்பனை ஆனால் ரூ.80 ஆயிரம் வரை கிடைக்கும். எனவே கட்டுப்படியான விலை கிடைக்கும் வரை கோரை விற்பனை செய்வது இல்லை என்று முடிவு செய்து உள்ளோம். விரைவில் தீர்வு ஏற்படவில்லை என்றால் அடுத்த கட்டமாக போராட்டம் நடத்தப் படும். இவ்வாறு அவர் கூறினார்.

## தலமலை காப்புக்காடு பகுதியில் 1 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டம் வனத்துறை அதிகாரிகள் தகவல்

நாமக்கல் மாவட்டம் தலமலை காப்புக்காடு பகுதியில் இந்த ஆண்டு 1 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு இருப்பதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரக்கன்றுகள் பராமரிப்பு

நாமக்கல் மாவட்ட வனத்துறை சார்பில் கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள நடுகோம்பை மற்றும் எருமப்பட்டி வன பணியாளர்கள் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் நாற்றாங்கல் தயார் செய்யப்பட்டு, மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த மரக்கன்றுகள் தற்போது நன்கு செழித்து வளர்ந்து வருகின்றன. இவற்றை ஓரிரு மாதங்களில் தலமலை காப்புக்காடு பகுதியில் நட திட்டமிடப்பட்டு இருப்பதாக வனத்துறையினர் தெரிவித்தனர். 12 வகையானது இதுகுறித்து நாமக்கல் மாவட்ட வனஅலுவலர் குணசேகரன் மற்றும் வனசரகர் கனகரத்தினம் ஆகியோர் கூறியதாவது:-

தமிழக அரசின் மாபெரும் மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு தலமலை காப்புக்காட்டில் 1 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்றுகளை நட திட்டமிட்டு உள்ளோம். இதற்காக நடுகோம்பையில் 60 மரக்கன்றுகளும், எருமப்பட்டியில் 50 ஆயிரம் மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருகின்றனர். இந்த மரக்கன்றுகள் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடப்படும். கடந்த ஆண்டு தலமலை காப்புக்காடு பகுதியில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு புங்கன், வேம்பு, வாகை, ஆவி, புளி, கிலேரியா, உதியன் உள்ளிட்ட 12 வகையான மரக்கன்றுகள் தயார்படுத்தப்பட்டு வருகிறது.

இதேபோல் சந்தனமரங்களும் தமிழகத்தில் அழிந்து வருவதால், அதனை அதிகப்படுத்தும் நோக்கில் 2 ஆயிரம் சந்தன மரக்கன்றுகளை பராமரித்து வருகிறோம். இவற்றையும் ஒரிரு மாதங்களில் தட்பவெப்பநிலை சீராக உள்ள பகுதிகளில் நட உள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உயிர்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்க 3 லட்சம் மரக்கன்றுகள் தயார் வனச்சரக அதிகாரி தகவல்

திருவண்ணாமலை,

உயிர்பன்மை பாதுகாப்பு, பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்க 3 லட்சம் மரக்கன்றுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது உள்ளது. இவை ஆகஸ்டு மாதம் இலவசமாக வழங்கப்படும் என வனச்சரக அதிகாரி தெரிவித்தார்.

<u>வனப்பரப்பினை அதிகரிக்க..</u>

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம், செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் வனப்பரப்பினை 33 சதவீதமாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். தனியார் நிலங்களில் மரங்கள் வளர்ப்பதே இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமப்பகுதியை சேர்ந்த பயனாளிகளுக்கு அந்த பகுதியின் மண்ணின் தன்மைக்கேற்ப மரக்கன்று வகைகள் வழங்கப்படுகின்றன. இதில் 1½ ஏக்கர் முதல் 12½ ஏக்கர் வரை வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் வீதம் இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 2014–15–ம் ஆண்டில் 3 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, திட்ட

கிராமங்களில் வினியோகம் செய்யப்பட உள்ளது.ஆகஸ்டு மாதம் வழங்கப்படும்இது குறித்து வனச்சரக அதிகாரி மாசிலாமணி கூறுகையில், ‘‘திருவண்ணாமலை மாவட்டத்தில் 2014–15–ம் ஆண்டில் 3 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு இலவசமாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதன்படி தேக்கு, செம்மரம், ரோஸ், மலைவேம்பு, நெல்லி, பலா, பாதாம் உள்பட பல்வேறு மரக்கன்றுகள் வழங்க தயார் நிலையில் உள்ளது.இந்த திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்க சாத்தனூர், வீரணம், தரடாப்பட்டு, மன்சுராபாத், குட்டகரை, மேல்பட்டு, மட்டபிறையூர் உள்பட 15 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த கிராமங்களில் உள்ள மண்ணின் தன்மைக்கு ஏற்ப பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும்.

இதன்மூலம் கீழ் இலவசமாக மரக்கன்றுகள் பெற பயனாளிகள் தங்கள் நிலத்தின் சிட்டா நகல், ரேசன்கார்டு நகல், பாஸ்போர்ட்டு சைஸ் போட்டோ 2, ஆதார் கார்டு அல்லது வாக்காளர் அட்டை மற்றும் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து வனச்சரக அலுவலத்தில் கொடுக்க வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவம் வனச்சரக அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படும்.

ஆகஸ்ட் மாதம் முதல்...மேலும் தேர்ந்து எடுக்கப்படாத கிராமங்களிலும் மரம் வளர்க்க விரும்பும் பயனாளிகளுக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் மரக்கன்றுகள் வழங்கப்படும்.

தற்போது 3 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. வருகிற ஆகஸ்டு முதல் பயனாளிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது. மரக்கன்றுகள் நடவு மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு 2–ம் ஆண்டு முடிவில் உயிர் செடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பட ஊக்கத்தொகை வழங்கப்படும்’’ என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி_

மத்திய வங்கக் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆந்திராவின் வடக்கு எல்லைக்கும் ஒடிசாவின் தெற்கு எல்லைக்கும் இடையே நிலை கொண்டுள்ளது.

இதனால் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா மாநிலங்களில் மழை பெய்யும். தமிழகத்தில் வெப்பச் சலனம் காரணமாக ஆங்காங்கே மழை பெய்யும் என்றும் குறிப்பாக கடலோர மாவட்டங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது._ஆனால் பெரிய பாதிப்பேதும் இருக்காது என்று

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை ரூ.50 உயர்வு_: மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில் முடிவு_

இந்த ஆண்டுக்கு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை (எம்எஸ்பி) மத்திய அரசு குவின்ட்டாலுக்கு ரூ.50 உயர்த்தி உள்ளது. இதுபோல பருப்பு வகைகளின் விலையும் ரூ.275 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடை பெற்ற பொருளாதார விவகாரங் களுக்கான மத்திய அமைச்சர வைக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இதுகுறித்து மத்திய அரசு வெளி யிட்ட அறிக்கையில் கூறியிருப்ப தாவது:

2015-16 பயிர் ஆண்டின் காரிப் பருவ வேளாண் விளைபொருட் களின் குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்த பொருளாதார

விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

வேளாண் விளைபொருட் களுக்கான செலவு மற்றும் விலை நிர்ணய ஆணை யத்தின் (சிஏசிபி) பரிந்துரை அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விவசாயிகளிடமிருந்து அரசு கொள்முதல் செய்வதற்கான விலையே எம்எஸ்பி ஆகும். இதன்படி சாதாரண நெல்லுக்கான ஆதார விலை குவின்ட்டாலுக்கு ரூ.1,360-லிருந்து ரூ.1,410 ஆகவும், முதல் தர நெல்லுக்கான விலை ரூ.1,400-லிருந்து ரூ.1,450 ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

எம்எஸ்பியைப் பொருத்த வரை சிஏசிபி-யின் பரிந்துரையை அரசு அப்படியே ஏற்றுக்கொள் வது வழக்கம். எனினும், தானிய வகைகளின் கையிருப்பு உபரி யாகவோ, பற்றாக்குறையாகவோ இருக்கும்போது சிஏசிபியின் பரிந்துரையைவிட குவின்ட் டாலுக்கு ரூ.200 குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ நிர்ண யிக்கப்படும்.

எம்எஸ்பி அதிகரிக்கப்பட்டிருப் பதன் மூலம் வேளாண் உற் பத்தியை அதிகரிப்பதில் விவசாயி கள் கவனம் செலுத்துவார்கள். பற்றாக்குறையை சமாளிக்க பருப்பு வகைகளை இறக்குமதி செய்வது என கடந்த வாரம் முடிவு எடுக்கப்பட்டது. இதன்மூலம் விலைவாசி குறையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் சிங் செய்தியாளர்களிடம் கூறும் போது, “இந்த ஆண்டுக்கு உளுத்தம் பருப்புக்கான எம்எஸ்பி குவின்ட்டாலுக்கு ரூ.275 அதிகரிக்கப்பட்டு ரூ.4,625 ஆகவும் பாசி பருப்பின் விலை ரூ.250 அதிகரிக்கப்பட்டு ரூ.4,850 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது” என்றார்.

**புற்றுநோயை குணமாக்கும் இயற்கை காய்கறிகள், பழங்கள்!**

'நோய்களின் கற்பனைகளும், உடல் நலத்துக்கான வழிகளும்' என்ற தலைப்பில் சென்னை, ரஷ்யன் கலாச்சார மையத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. சர்வதேச தமிழ் தாவர உணவாளர்கள் சங்கம் மற்றும் சர்வதேச தாவர உணவாளர்கள் சங்கம் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.



சிறப்பு விருந்தினராக அமெரிக்காவைச் சேர்ந்த புற்றுநோய் மருத்துவர் டாக்டர். தாமஸ் லோடி கலந்து கொண்டார். இவர் தாய்லாந்தில் உள்ள பாங்காக் நகருக்கு அருகில் இயற்கை முறை புற்றுநோய் மருத்துவமனையை நடத்தி வருகிறார். புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களை இயற்கையான காய்கறிகளை சாப்பிட சொல்லியும், இயற்கை முறை பயிற்சிகளாலேயும் நோயை தடுத்தும், குணப்படுத்தியும் உள்ளார். இந்தமுறையில் 2 ஆயிரம் புற்று நோயாளிகளை காப்பாற்றியுள்ளார்.

இயற்கையோடு இணைந்து வாழ்தல், அளவறிந்து உண்ணுதல் மூலம் உடலுக்கான ஆற்றலை பெற முடியும் என்கிறார் தாமஸ் லோடி.


கூட்டத்தில் அவர் பேசும்போது, "இயற்கையின் இயல்பே நல்ல உடல்நலத்தோடு இருப்பதுதான். உடலிலிருந்து கழிவுகளை நீக்கி கொண்டே வந்தால், உடலுக்கான ஆற்றல் தானாகவே வளரும். நீங்கள் நினைப்பது போன்று புற்றுநோய் என்பது பரம்பரையாகவோ, கிருமிகளாலோ வருவதில்லை. தவறான உணவுப் பழக்கத்தினாலும், மனம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளாலேயே வருகிறது. உடலிலுள்ள விஷத்தையும், மனத்திலுள்ள விஷத்தையும் அகற்றினால் புற்றுநோயிலிருந்து எளிதில் குணமாகலாம். இதற்கு இயற்கையான சிகிச்சை முறைகளைத்தான் பரிந்துரைக்கிறேன். பழங்கள், காய்கறிகள், கீரைகளை சரியான விகிதத்தில் எடுத்துக்கொள்ள பயிற்சி அளிக்கிறேன்.



அதேபோன்று மனத்துக்கும் தியானம் போன்ற இயற்கை முறை சிகிச்சைகளை கொடுக்கிறேன். இதன்மூலமே புற்றுநோயிலிருந்து நிறைய பேரை மீட்டு எடுத்திருக்கிறேன். காலின் கேம்பல் என்பவர் 40 வருஷமாக புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். ஆராய்ச்சியின் முடிவில் தவறான உணவு பழக்கமே புற்றுநோய்க்கு காரணம் என்று தெரிவித்தார். புற்றுநோய் வருவதற்கு பாலை அதிகளவில் எடுத்துக் கொள்வதும் ஒரு காரணம். பாலில் 'கேசின்' என்ற பொருள் புற்றுநோயை உண்டாக்க கூடியதாக இருக்கிறது. வளர்ந்த

பிராணிகள் எதுவும் பாலை அருந்துவதில்லை. மனிதன் மட்டுமே பாலை அருந்துகிறான்" என்றவரிடம், "பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்பட்ட, மரபணு மாற்றப்பட்ட காய்கறிகள், பழங்களை சாப்பிடலாமா?" என்ற கேள்விக்கு, "முடிந்தளவு ஆர்கானிக் உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது. வேறு வழியில்லையென்றால் மட்டுமே இவற்றை எடுத்துக் கொள்ளலாம்" என்று பதிலளித்தார்.

சர்வதேச தமிழ் தாவர உணவாளர்கள் சங்க நிறுவனர் அசோக்குமார் பேசும்போது, "பார்சிகள் இனத்தில் இறந்த உடலை கழுகுக்காக மலையின் மீது சாப்பிட வைப்பார்கள். சமீப காலங்களில் இறந்த மனிதனின் உடலை சாப்பிட்ட கழுகுகள் இறந்து போய்விடுகிறதாம். அந்தளவுக்கு மனிதனின் உடல் நஞ்சாக மாறியுள்ளது. ஃபாஸ்ட் புட், ஜங்க் புட், அதிகமான அசைவ உணவுகள் என்று நாளுக்கு நாள் நமது உணவு பழக்கம் மாறிக் கொண்டே வருகிறது. நோய்கள் அதிகரிப்பதோடு, வன்முறையும் நாட்டில் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் அதிகம் சமைக்கப்பட்ட அரிசி உணவுகளை எடுத்துக் கொள்வது, அளவுக்கதிகமாக உண்பது போன்ற காரணங்களால், உடல் பருமன் நோய் வாட்டி வதைக்கிறது. உடல் பருமன் அனைத்துவிதமான நோய்களுக்கும் காரணமாக இருந்து வருகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கு, 30 வயசுக்கு மேல் அரிசி உணவை குறைத்துக்கொள்வது நல்லது. சமைக்கப்படும் உணவு மசாலா, எண்ணெய் ஆகியவை சேர்த்து சமைக்கப்படுகிறது. அரை வயிறு சாப்பிட்டாலே ஆரோக்கியமா வாழலாம்.



அதனால்தான் வன்முறையற்ற உணவு என்ற பெயரை இயற்கையான தாவர உணவுகளுக்கு பெயர் வைத்து அழைக்கிறோம். எங்கள் தாவர உணவாளர்கள் சங்கத்தின் மூலமாக காய்கறிகள், பழங்கள், கீரைகளை சமைக்கப்படாமல் இயற்கையாகவே உண்ணவே பரிந்துரைத்து வருகிறோம். இதற்காக பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பொதுமக்களுக்கான கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். மனிதநேயமிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்கோடு செயல்பட்டு வருகிறோம். உங்கள் உணவே, உங்களை வெளிப்படுத்தும் மதிப்பீடு. 2012 ஆம் ஆண்டில் 7 லட்சம் பேர் இந்தியாவில் புற்றுநோயால் இறந்துள்ளனர். வளர்ந்து வரும் மோசமான உணவு பழக்கங்களே இதற்கு காரணம்" என்றார்.

இயற்கை உணவுகளை எப்படி எடுத்து கொள்வது பற்றி பேசினார் உடல்நல ஆலோசகர் டாக்டர் சரவணன், "தாவர உணவுகளே மனிதர்களுக்கான அடிப்படையான உணவு. இதில் பழங்கள், காய்கறிகள், கீரைகள், பயறு, பருப்பு வகைகளை எடுத்துக் கொள்ளலாம். காலையில் பழங்களை மட்டுமே உண்பது நல்லது. மதிய வேளையில் முளைகட்டிய பயறு வகைகள், காய்கறிகள், கீரைகளை சாப்பிடலாம். இரவு வேளையில் பழங்களை எடுத்துக் கொள்ளலாம். பழங்களோடு காய்கறிகள் சேர்த்து உண்ண விரும்புபவர்கள் முதலில் பழங்களையும்,

பிறகு காய்கறிகளையும் சாப்பிடலாம். நல்ல உடல்நிலையில் இருப்பவர்கள் இந்த உணவு பழக்கத்துக்கு மாறிய பிறகு, அடிக்கடி ஊட்டச்சத்து நிபுணரிடம் வைட்டமின்கள், சத்துக்களின் சரிவிகிதம் குறித்து அடிக்கடி சோதனை செய்து கொள்வது நல்லது. நோய் உள்ளவர்கள், அதற்கு மாத்திரை சாப்பிடுபவர்கள் உரிய மருத்துவரின் ஆலோசனைபடி சாப்பிடுவது நல்லது" என்றார்.



**டாக்டர் தாமஸ் லோடி சொன்ன சில டிப்ஸ்:**

1. உடலானது அதுக்கு என்ன தேவையோ அதற்கு தகுந்தபடி தகவமைத்துக் கொள்ளும் தன்மையுடையது. சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப, அந்தந்த சீஷன்களில் கிடைக்கக்கூடிய காய்கறிகள், பழங்களை சாப்பிட வேண்டும். பிரிட்ஜில் வைத்த பழங்களை பயன்படுத்தாதீர்கள்.

2. அமெரிக்க உணவு முறையான ஜங் புட்டை பின்பற்றாதீர்கள். உங்கள் நாட்டின் உணவை சாப்பிடுவதே உடலுக்கு நல்லது.

3. முடிந்தளவு இயற்கையான சூழலில் இருக்க பழகுங்கள்.

4. தனியாக தியானம் பண்ணுங்கள்.

5. சூரிய ஒளி உடல் மீது படும்படி உலாவுங்கள். ஷூ போடாமல் நடந்து செல்லுங்கள்.

உணவு ஆர்வலர் குமரேசன் கூறும்போது, "இயற்கை விவசாய முறையில் கொடைக்கானலில் உள்ள பண்ணையில் காய்கறிகளை உற்பத்தி செஞ்சு சாப்பிடுறேன். கடந்த ஒரு வருடமாக இயற்கை காய்கறிகளை மட்டுமே சாப்பிடுகிறேன். எனக்கு சர்க்கரை வியாதி இருக்கிறது. இயற்கை காய்கறிகளை சாப்பிட ஆரம்பிச்ச பிறகு, சர்க்கரை நோய்க்கு மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திட்டேன். சர்க்கரையின் அளவு சரியாக இருக்கிறது. முதலில் பால், தயிர், மோர் சாப்பிடுவதை நிறுத்தினேன். பிறகு அரிசி உணவுகளை தவிர்த்தேன். இப்போது காய்கறிகள், பழங்களை சாப்பிட்டு வருகிறேன். உண்மையான ஆர்வத்தோடு, இயற்கை உணவுகளை உண்டால் நோயிலிருந்து உடலை காப்பாற்றி கொள்ளலாம்". 47 ஆண்டுகளாக தேங்காய், வாழைப்பழம் மட்டுமே சாப்பிட்டு வரும் இயற்கை உணவாளர் மு.அப்பன் பேசும்போது, "என்னுடைய 20 வயதில் குஷ்டம் நோயால் அவதிப்பட்டேன். எங்கெங்கோ வைத்தியம் பார்த்தும் சரியாகலை. அப்போ ஆசிரியரான என் அண்ணன், கொடுத்த யோசனைப்படி இயற்கை உணவுகளை எடுத்துக்கிட்டேன். அந்த நோய் ஒரு வருஷத்திலேயே குணமாகிருச்சு. இப்பவும் அப்படியேதான் இயற்கை உணவை சாப்பிட்டு வர்றேன். முதல்ல சாப்பாட்டை வேகவைச்சு சாப்பிடுறத நிறுத்தினேன். அப்புறம் தேங்காய், வாழைப்பழம், இதோடு சீசன்ல பேரிச்சம்பழம், மாம்பழம் சாப்பிடுவேன். மனிதன் பசிச்சாதான் சாப்பிட வேண்டும். அதையும் நன்றாக மென்னு சாப்பிடணும். மனிதன் ஒருவன்தான் உலகிலேயே சமைத்து சாப்பிடக் கூடியவன். ஆனால் அவனுக்குத்தான் எத்தனைவிதமான நோய்கள். இதற்கு காரணம் மறைந்த நமது பாரம்பர்ய உணவுப்பழக்கம்தான். அன்றைய மருத்துவர்கள் எல்லாம் ஆன்மீகத்தின் பெயரால் மருந்து

கொடுத்தாங்க. இன்னைக்கு அதன் நிலையே வேறு. பறவைகளும், விலங்குகளும் எந்த உணவு பழக்கத்தையும் மாத்தல. ஆனால் மனிதன் மட்டும்தான் வெளிநாட்டுக் கலாச்சாரம்ங்கற பேர்ல வரைமுறையே இல்லாமல் சாப்பிடுறான். நம் மூதாதைங்க தேங்காயையும், வாழைப்பழத்தையும் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே ஆன்மீகத்துல சேத்துட்டாங்க. இதனால எந்த நோயும் உருவாகிறதில்ல. சமைச்சு சாப்பிடுறதுதான் உடலுக்கு கெடுதியான விஷயம். தேங்காயும் வாழைப்பழமும் உடம்புக்கு நல்லது அதே போல இயற்கை தானிய பயிர்களும் உடம்புக்கு நல்லதுதான். முடிஞ்சவரை இயற்கைக்கு மாறுங்கள்" என்றார்.

தினகரன்

**திருச்சியில் அலுவலர்களுக்கு பயிற்சி பயறு, எண்ணெய் வித்து உற்பத்தியில் சிறப்பு கவனம்வேளாண் இணை இயக்குனர் அறிவுறுத்தல்**

திருச்சி,: பயறு மற்றும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என சான்று விதை உற்பத்தி பயிற்சியில் வேளாண் இணை இயக்குனர் தகவல் தெரிவித்தார். அரசு விதை வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், பண்ணை மேலாளர்கள் மற்றும் உதவி விதை அலுவலர்கள் ஆகியோருக்கு தரமான விதை உற்பத்தி மேற்கொள்ள விதைச் சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சி விதைச்சான்று துறை மூலம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கூட்ட மன்றத்தில் நேற்று நடைபெற்றது.

திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பாண்டியராஜன்

தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில், உற்பத்தி இலக்கை அடைய அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்த நிலையில், விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள துறை அலுவலர்கள் விதைச்சான்று நடை முறைகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். தரமான விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கு வதை கடமையாக கொண்டு செயல்பட வேண்டும். மேலும் பயறு மற்றும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

வேளாண்மை துணை இயக்குநர் மணிவண்ணன் பேசுகையில், விதை உற்பத்தியில் உதவி விதை அலுவலர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. அதனால் எவ்வாறு திட்டமிட்டு செயல் படவேண்டும். விதைப் பண்ணை பதிவிலிருந்து விதை சான்ற ளிப்பு வரை உதவி விதை அலுவலர் தொய்வில்லாமல் பணி செய்திட வேண்டும் என்றார். அதனைத் தொடர்ந்து வேளாண்மை துணைஇயக்குநர் (உழவர் பயிற்சி) ராஜாமணி, திருச்சி மாவட்ட விதைப்பரிசோதனை அலுவலர் எழில்அரசு, வேளாண்மை உதவி இயக்குனர் சந்தானகிருஷ்ணன், விதை ஆய்வாளர் அருள்ராஜ், வேளாண்மை அலுவலர் மனோன்மணி ஆகியோர் பேசினர். விதைச் சான்று அலுவலர்கள் ஆனந்தசெல்வி, ரெங்கராஜன், கோவிந்தராஜ், சுரேஷ்குமார், நாகராஜன், ரம்யாதேவி ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சிக்கான காணொலிக் காட்சி களை விதைச்சான்று அலுவலர் கவிதா செய்திருந்தார்.

**வெங்காய சாகுபடியில் பயிர் பாதுகாப்பு உதவி இயக்குனர் ஆலோசனை**

பழநி, : வெங்காய சாகுபடியில் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ஆலோசனை வழங்கினர்.

வெங்காயம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை குறித்து

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் கூறியது: நடவு வயலைச்சுற்றி இரு வரிசையில் மக்காச்சோளம் பயிரிடலாம். தரமான விதை வெங்காயத்தை தேர்வு செய்து, ஒரு கிலோவிற்கு சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 5 கிராம் உடன் டிரைகோடெர்மா 5 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். நடவு வயலில் 1 ஹெக்டேருக்கு சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 1.25 கிலோவுடன் அசோஸ்பைரில்லம் 2 கிலோ மற்றும் பாஸ்போ பாக்டீரியா 2 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 250 கிலோ வீதம் கலந்து மண்ணில் இட வேண்டும்.

மஞ்சள் ஒட்டுப்பொறி ஹெக்டேருக்கு 12 எண்கள் வீதம் வைத்து, வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சிப்பொறி ஹெக்டேருக்கு 12 எண்கள் வீதம் வைத்து புழுக்களின் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 5 கிராம் பிவேரியா பேசியானா 10 கிராம் 1 லிட்டர் நீரில் கலந்து 30ம் நாள் தெளித்து தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம். பூச்சி நோய்களை கட்டுப்படுத்த அசாடிராக்டின் மருந்தினை 2 மிலி, 1 லிட்டர் நீர் வீதம் கலந்து 40ம் நாள் தெளித்து கட்டுப்படுத்தலாம். பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் 2 கிராம், 1 லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும், ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி வைக்கவும். கோடை உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழிக்கவும். பயிர்சுழற்சி முறையை கையாண்டு விவசாயிகள் லாபம் அடையலாம்' என்றார்.

**கரூர் பகுதியில் மக்களை அதிகம் கவரும் ஆர்கானிக் மாம்பழங்கள் இயற்கை முறையில் பழுக்க வைப்பதால் நல்ல வரவேற்பு**

கரூர், : ஆர்கானிக் மாம்பழங்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. கரூர் மாவட்டத்திற்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து மாம்பழங்கள் விற்பனைக்காக

கொண்டுவரப்படுவது வழக்கம். 10க்கும் மேற்பட்ட மாம்பழ ரகங்கள் விற்பனைக்காக வரும். இந்த ஆண்டு மாம்பழம் சாகுபடி செய்யப்பட்ட இடங்களில் போதுமான மழையில்லாதால் விளைச்சல் குறைவாக இருந்தது. இதனால் மாம்பழங்கள் வரத்தும் வழக்கமான அளவில் இல்லை.

முதல்சீசனில் விளைச்சல் குறைவாக இருப்பினும், ஏப்ரல் கடைசி மற்றும் மே மாதத்தில் விளைச்சல் அதிகம் காரணமாக அதிக அளவு மாம்பழங்கள் விற்பனைக்காக வந்தன. தற்போது கரூர் மாம்பழ குடோன்களுக்கு இமாம்பசந்த், பங்கனபள்ளி, செந்தூரம் ஆகிய ரகங்கள் விற்பனைக்காக வந்துள்ளன. கரூர் மாவட்டத்தில் ஆர்கானிக் முறையில் விளைவிக்கப்பட்ட மாம்பழங்கள் வரத்துஅதிகமாக இருக்கிறது. ஆங்காங்கே சாலையோரங்கள் இந்த மாம்பழங்கள் விற்பனையாகின்றன. இயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட கல்லாமணி, செந்தூரம், பங்கனபள்ளி ஆகிய ரக மாம்பழங்களை பொதுமக்கள் அதிகமாக வாங்கிசெல்கின்றனர். இவை முறையே ரூ.40, ரூ.50 ரூ.60 விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இயற்கை முறையில் பழுக்க வைக்கப்படுவதால் சுவை நன்றாக இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர். மாம்பழங்களை விரைவில் பழுக்க வைப்பதற்காக கார்பைட் ரசாயனக்கல் மூலமாக பழுக்க வைக்கப்படுகிறது. சில இடங்களில் இம்முறையை பின்பற்றுகின்றனர். மாம்பழங்களை பொறுத்தளவில் இயற்கையாக எத்திலின் வேதியியல் மாற்றத்தினால் பழுக்கிறது.

ஆனால் ரசாயனக்கல் மூலமாக பழுக்க வைப்பதால் மேல்புறம்தோல் நிறம் மாறினாலும், உள்பகுதியில் பழுக்காமலும், சுவையற்றதாகவும் இருக்கும். ரசாயனமுறையில் பழுக்கவைத்த பழங்களை சாப்பிடும்போது, வாந்தி, வயிற்றுப்போக்கு, தொண்டை புண், ஆகியவை ஏற்படும்

புற்றுநோய் ஆபத்துகூட உள்ளது டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். போதிய விழிப்புணர்வினை இதுகுறித்து ஏற்படுத்த வேண்டும். சுகாதாரத்துறையினர் பெயரளவுக்கு கரூரில் உள்ள மாம்பழக்குடோன்களில் சோதனை நடத்திவிட்டு போய்விடுகின்றனர்.

**கரூர் மாவட்டத்தில் வெல்லம் கொள்முதல் விலை குறைவு**

கரூர், : கடந்த வாரத்தை விட வெல்லம் கொள்முதல் விலை குறைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் முத்தனூர், நடையனூர், கவுண்டன்புதூர், கரைப்பாளையம், நொய்யல், சேமங்கி உள்பட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். விளைந்த கரும்புகளை விவசாயிகள் புகழூர் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்து அரவைக்கு அனுப்புகின்றனர். பதிவு செய்யாத விவசாயிகளிடம் இருந்து கரும்பு கொள்முதல் செய்யப்பட்டு வெல்லம் தயாரிக்கப்படுகிறது. இதற்காக விவசாயிகள் வெல்லம் தயாரிப்புக் கூடங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2200 வரை கரும்பு விற்பனை செய்கின்றனர். கொள்முதல் செய்யப்பட்ட கரும்புகளை எந்திரத்தின் மூலம் சாறுபிழிந்து இரும்பு கொப்பரையில் ஊற்றி பாகுபதம் வந்ததும் அச்சுகளில் ஊற்றி அச்சு வெல்லமாகவும், துணிகள் பயன்படுத்தி உருண்டை பிடிக்கப்பட்டு உருண்டை வெல்லமாகவும் தயாரிக்கப்படுகிறது. 30 கிலோ கொண்ட சிப்பங்களாக மூட்டைகளில் கட்டி விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. தற்போது, உருண்டை வெல்லத்திற்கு ரூ.870 எனவும், அச்சுவெல்லத்திற்கு ரூ.950எனவும் வியாபாரிகள் விலை கொடுத்தனர். கடந்த வாரம் உருண்டைவெல்லம் ரூ.ஆயிரத்து50க்கும், அச்சுவெல்லம் ரூ.ஆயிரத்து100 எனவும் விலை கிடைத்தது. கடந்த வாரத்தை விட வெல்லம் கொள்முதல் விலை குறைந்துள்ளது.

**குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மானிய உதவிகள் பெற அழைப்பு**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மானிய உதவி பெற விண்ணப்பிக்கலாம். அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: தமிழக அரசு 2015ம் ஆண்டில் குறுவை சாகுபடி பரப்பினை அதிகரித்து உற்பத்தியை இரு மடங்காக உயர்த்தி விவசாயிகளின் லாபத்தை மும்மடங்காக அதிகரிக்க குறுவை தொகுப்பு உதவித் திட்டம் தமிழக அரசால் கடந்த ஜூன் 4ம் தேதி அறிவிக்கப்பட்டது. அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் ரூ.33.95 லட்சம் மதிப்பீட்டில், பின்வரும் மூன்று திட்ட உட்பிரிவுகள் வாரியாக இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் குறுவை நெல் சாகுபடியை இயந்திர நடவு மூலம் மேற்கொள்ள உத்தேசித்து, இயந்திர நடவிற்கு நாற்று பாவிடும் விவசாயிகளுக்கு அரசு செலவிலேயே வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக நெல் நடவு செய்து கொடுத்திட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம், 770 ஏக்கரில் நடவு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறுவை நெல் சாகுபடிக்கு, நெல் நுண்ணூட்டச் சத்து மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 315 வீதம் 4,000 ஏக்கர் பரப்பிற்கு, நேரடியாக விவசாயிகளின் வங்கி சேமிப்பு கணக்குகளில் வரவு வைத்திடவும் உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேலும் களர் பிரச்னை உள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்படும் குறுவை நெல்லுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 200 கிலோ என்ற அளவில் ஜிப்சம்

விலையேதுமின்றி 1,500 ஏக்கர் பரப்பிற்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கிடவும் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் ஒவ்வொரு திட்ட உட்பிரிவிற்கும் பிரத்யேகமாகவுள்ள விண்ணப்பப் படிவங்களை அந்தந்த பகுதி வேளாண் உதவி அதிகாரிகள் மூலமாக பெற்று, படிவங்களை பூர்த்தி செய்து அவர்களிடமே ஜூன் மாத இறுதிக்குள் ஒப்படைக்க வேண்டும். குறுவை சாகுபடி தொகுப்பு உதவித் திட்டத்தின் கீழ், மானியத் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைத்திட ஏதுவாக ஒவ்வொரு பயனாளியும் தங்களது வங்கிக் கணக்கு எண் முதலான விபரங்களை வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க ஒளி நகலுடன் இணைத்து விண்ணப்பித்திட வேண்டும். மேலும் ஆதார் அட்டை வைத்துள்ள விவசாயிகள் அதன் விபரத்தினை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். குறுவை சாகுபடி தொகுப்பு உதவித் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் பெயர் பட்டியல் அந்தந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களில் தயார் செய்யப்பட்டு வருகிறது. எனவே, குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள மற்றும் மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் அரசு மானியத்தை பெற்றிட வேளாண் விரிவாக்க மையங்களில் முன்னுரிமைப் பதிவேட்டில் தங்களது பெயரை பதிவு செய்திடவும், விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**அரியலூரில் 26ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர், : அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 26ம் தேதி நடைபெறுகிறது. அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் வரும் 26ம் தேதி பகல் 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற இருக்கிறது. கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், கடன் உதவிகள், இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் விவாதிக்கப்படும். எனவே அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.